# பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்)

## <u>அறிமுகம்</u>

நம் நாடு சுதந்திரம் பெற்ற உடன் அகதிகள் மறுவாழ்வுக்காக நாட்டில் பொது வீட்டு வசதி திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது வறுமை ஒழிப்பு திட்டங்களில் மிகவும் முக்கியமான பகுதியாக இருந்தது.

2022க்குள் அனைவருக்கும் வீடு என்ற மத்திய அரசின் வாக்குறுதிகேற்ப ஏற்கனவே செயல்பட்டு வந்த இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட விதிமுறைகளை சற்றே மாற்றி அமைத்து பாரத பிரதமர் வீடு கட்டும் திட்டம் (ஊரகம்) என்ற பெயரில் 01.04.2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது .

இத்திட்டத்தின் நோக்கம் கூரை மற்றும் ஓட்டு வீடுகள் மற்றும் பழுதடைந்த இடிந்து விழும் தருவாயில் உள்ள வீடுகளுக்கு மாற்றாக சிமெண்ட் காங்கிரிட் தளத்துடன் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய வீடுகளை 2022க்குள் கட்டித்தருவதாகும். குடிசை வீடு, பழுதடைந்த வீடு வீட்டில் வசிக்கும் ஒரு கோடி குடும்பங்களை மூன்று ஆண்டுகளில் (2016-17 முதல் 2018-19) இத்திட்டத்தில் உள்ளடக்குவது இத்திட்டத்தின் உடனடி நோக்கமாகும். வீட்டின் குறைந்தபட்ச அளவு 20 சதுர மீட்டரில் இருந்து 25 சதுர மீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.



மேலும் சமவெளிப் பகுதிக்கு அலகு தொகையானது ரூ.70,000/- லிருந்து ரூ.1.20 இலட்சமாகவும் மலைப்பகுதியில் உள்ள மாநிலங்கள் மற்றும் கடினமான பகுதிகளில் அலகு தொகை ரூ.70,000/- லிருந்து ரூ.1.30 இலட்சமாகவும் ஆகும் உயர்த்தப்பட்டுள்ளது மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் 90 மனித வேலை நாட்களுக்கான ஊதியமும் மற்றும் தூய்மை பாரத இயக்கம் /மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் கழிவறைகள் கட்டப்படும். மேலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் குடிநீர் குழாய், மின்சார இணைப்பு, எல்பிஜி எரிவாயு இணைப்பு போன்றவைகள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.

மத்திய மாநில அரசின் பங்குத்தொகை களாக 60:40 என்ற விகிதத்திலும் வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதிகளில் உள்ள மாநிலங்களுக்கு 90:10 எந்த விதத்திலும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. PMAY(G) திட்டத்திற்கான வருடாந்திர மத்திய பட்ஜெட் தொகையில் இருந்து 95 % நிதி இத்திட்டத்தில் புதிய வீடு கட்டுவதற்கான அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுகிறது இதில் 4% நிதியானது இத்திட்ட நிர்வாக செலவினம் தொகையும் அடங்கும். மேலும், 5% தொகையானது மத்திய அரசு அளவில் சிறப்பு திட்டங்களுக்காக இருப்பில் வைக்கப்படும்

PMAY(G) திட்டத்தில் முக்கிய அம்சங்களில் ஒன்று பயனாளியை தேர்ந்தெடுக்கும் முறையாகும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள வீடுகளிலிருந்து பயனாளியை தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக 2011 இல் எடுக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார கணக்கெடுப்பின் அடிப்படையில் குடிசை வீடு, மண்சுவர் உடன் கூடிய வீடு, ஒன்று மற்றும் இரண்டு அறைகள் கொண்ட வீடுகளில் வசிப்பவர்கள் மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்குவது முக்கிய அம்சமாகும்.

PMAY(G) திட்டத்தில் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்புக்காக Awaas soft செயலி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தில் புவிசார் குறியீடு மற்றும் Awaas soft என்ற மென்பொருளின் மூலம் பணி முன்னேற்றத்தினை கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக கொண்டுவரப்பட்டுள்ளது. Awaas soft MIS ல் பயனாளியின் வங்கிக் கணக்கு

எண்கள் பதிவு செய்யப்பட்டு அனைத்து மானியங்களும் நேரடியாக வங்கி கணக்கிற்கு விடுவிக்கப்படுகிறது. மேலும் விருப்பமுள்ள பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூ.70,000/- வரை கடன் உதவி பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படுவது மின்னணு முறையில் மட்டுமல்லாமல் சமூக தணிக்கை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், (திஷா குழு) மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள் மற்றும் தேசிய அளவிலான கண்காணிப்பாளர்கள் ஆகியோர் மூலமாகவும் கண்காணிக்கப்படுகிறது.

## <u>பயனாளிகளை அடையாளம் காணுதல் மற்றும் தேர்வு செய்தல்</u>




PMAY(G) திட்டத்தில் பயனாளிகள் 2011 இன் படி சமூக மற்றும் பொருளாதார கணக்கெடுப்பின் அடிப்படையில் குடிசை வீடு மண் சுவருடன் கூடிய வீடு, ஒன்று மற்றும் இரண்டு அறைகள் கொண்ட கூரை வீடுகளில் வசிப்பவர்கள் மற்றும் வீடு இல்லாத குடும்பங்களும் அடங்கும். தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினருக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படும்.

1. நிரந்தர வீடு இல்லாத குடும்பங்கள்.
2. ஆதரவற்ற / பிச்சை எடுத்து பிழைப்பவர்கள் .
3. கைகளினால் துப்புரவு பணி செய்யும் பணியாளர்கள் .
4. பழமையான பழங்குடி இன குழுக்கள் .
5. கொத்தடிமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் .
6. குடும்பத்தில் 16 முதல் 50 வயது வரை உறுப்பினர்கள் இல்லாத குடும்பங்கள் .
7. ஒரு குடும்பத்தில் 16 முதல் 59 வயதுவரை ஆண் உறுப்பினர் இல்லாத பெண் தலைமையிலான குடும்பங்கள்.

8. 25 வயதுக்கு மேற்பட்ட கல்வியறிவற்ற பெரியவர்கள் இல்லாத குடும்பங்கள் .

9. மாற்றுத்திறனாளிகளை கொண்ட குடும்பங்கள் .

10. நிலமற்ற குடும்பத்தை கொண்ட குறைந்த கூலி பெறும் சாதாரண தொழிலாளிகள் கொண்ட குடும்பங்கள் .

11. SECC 2011 Data ன் படி 60 சதவிகிதம் எஸ்சி /எஸ்டி வகுப்பிற்கு ஒதுக்கப்பட வேண்டும் .

12. மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீத ஒதுக்கப்பட வேண்டும்.

## இதர இனங்களை சேர்ந்தவர்களில் கீழ்கண்ட அவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்

- கணவனை இழந்த குடும்பத்தலைவிகள் .
- தோல் நோய் புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் .
- ஒரு பெண் குழந்தையுடன் உள்ள குடும்பங்கள் .
- பட்டியல் பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய மலைவாழ் மக்கள்.
- திருநங்கைகள்.

## வீடு கட்டுவதற்கான அளவீடுகள்

- ✓ குறைந்தபட்சம் 25 சதுர மீட்டர் மற்றும் 269 சதுர அடிக்கு குறையாமல் வீடு கட்ட வேண்டும் .
- ✓ வீடுகள் கட்ட ஒப்பந்ததாரர்கள் ஈடுபடுத்தக்கூடாது .
- ✓ அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளின் அடிப்படையிலேயே வீடுகள் கட்ட வேண்டும் .
- ✓ பரிந்துரைக்கப்பட்ட அளவீடுகளில் வீடுகள் கட்டப்பட வேண்டும் இருப்பினும் ஒட்டு மொத்த பரப்பளவில் 269 சதுரடிக்குள் சிறிய மாற்றங்கள் செய்யப்படலாம்.

## வேலை உத்தரவு வழங்குதல்

- சம்பந்தப்பட்ட பயனாளி எங்கு வீடு கட்ட உத்தேசித்து உள்ளாரோ அதே இடத்தில் பயனாளிகளை நிறுத்தி புகைப்படம் எடுத்து புவிசார் குறியீடு செய்தபின் Awaas soft மூலமாக பணி ஒப்படைப்பு ஆணைகள் கணினி மூலம் தயார் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும்.
- Awaas softல் பயனாளிகளின் பெயர், வங்கி கணக்கு எண், ஆதார் எண், வாரிசுதாரர் விவரம், மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்ட வேலை அடையாள அட்டை எண் ஆகியவைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

## வீடுகளின் கட்டுமான காலம்

வேலை உத்தரவு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்களுக்குள் பயனாளிகள் தங்கள் சொந்த செலவில் வீடுகளை கட்டி முடித்துக் கொள்ள வேண்டும் .

## PMAY(G) இத்திட்டத்திற்கு நிதி பங்குத்தொகை

- மத்திய அரசின் பங்கு தொகை ரூ. 72,000/-
- மாநில அரசின் பங்கு தொகை ரூ. 48,000/-
- மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட மொத்த அலகு தொகை ரூ.1,20,000/-
- மாநில அரசின் மேற்கூரை கட்டுமான கூடுதல் தொகை ரூ. 50,000/-
- தமிழ்நாட்டின் ஒரு வீட்டிற்கு மொத்த அலகு தொகை ரூ. 1,70,000/-

தூய்மை பாரத இயக்கம் அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதி உதவி மூலம் கழிப்பறை கட்டப்படும். கழிப்பறைகள் கட்டப்பட்டு பின்னரே வீடு கட்டி முடிக்கப்பட்டதாக கருதப்படும் .

<u>**ஆவாஸ் திவாஸ்**</u>

ஒவ்வொரு வருடமும் குடியிருப்பு திட்ட தொடர்பாக உணர வைக்கும் விதமாக **ஆவாஸ் தினம்**(வீட்டுவசதி தினம் )வட்டார வாரியாகவும், ஊராட்சி வாரியாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.




❖